FEDERAZIONE LOGOPEDISTI ITALIANI

www.fli.it

www.cplol.eu

primano

Eine Initiative der Stadt Bern zur Förderung von Kindern im Vorschulalter

Logopädie Bern

tamil 06/03/2014 / Illustrazione: Hugo Bossard, Biberist ©

# தாய் மொழி = இதயமொழி



எந்த மொழியில் நான் என் பிள்ளையுடன் கதைக்கலாம்?

# தாய் மொழி = இதயமொழி

- பல்மொழித்தகமை = வெற்றிக்குவழி
  இரண்டாவது மொழியின் வெற்றி முதலாவது மொழியின் தரத்தில் தங்கியுள்ளது.

- உங்களுக்கு நம்பிக்கையான, மனதுக்குச் சந்தொசமான மொழியில் பிள்ளையுடன் கதையுங்கள்.

- பெற்றோராகிய நீங்கள் பல மொழிகளில் கதைப்பதாயிருந்தால்,
  தாய் தகப்பன் தங்கள் தங்கள் மொழியில் பிள்ளையுடன் கதைத்தல் சிறந்தது.

- சிறு கதைகள், ஆறுதலளிக்கும் செய்யுள்கள், தாலாட்டுப் பாடல்கள் ஊடாக உங்கள் மொழியை, கலாச்சாரத்தை அறிவியுங்கள்.

அத்துடன்:
பெற்றோராகிய நீங்கள் பிரெஞ்ச் மொழியில் ஆர்வம் செலுத்தி பிரெஞ்ச் மொழி பேசும் பிள்ளைகளுடன் தொடர்புகளை உருவாக்குங்கள்.





# மொழி வளர்ச்சி

1. வருடத்தில்
தன் பெயரைக் கேட்டால் திரும்பிப்பார்க்கும்.
கேட்கும் சத்தங்களை வாயால் (லல்லல் போன்றன) உச்சரிக்கும்.

2. வருடத்தில்
சாதாரண வழமையான உத்தரவுகளை விளங்கிக் கொள்ளும்.
ஒற்றைச் சொற்களை கதைக்கும்.

3. வருடத்தில்
என்ன, யார், எப்படி? என்ற கேள்விகளைக் கேட்கும்.
பெரும்பாலான உச்சரிப்புக்களை சரியாக மீள உற்பத்தி செய்வார்கள்.

4. வருடத்தில்
சிறிய வசனங்களை உருவாக்குவதுடன் ஏன் என்றும் வினாவுவார்கள். சிறிய கதைகளை விளங்கிக் கொள்வதுடன் பாடல்கள் செய்யுள்களை ஞாபகத்தில் வைத்திருப்பார்கள்.

5/6 வருடத்தில்
வேற்றாரும் விளங்கும் வகையில் கதைப்பார்கள்.
உளஉணர்வுகள் தமது தேவைகள் தொடர்பகக் கதைப்பார்கள்.

- இந்த வளர்ச்சிகளை உங்கள் பிள்ளை அடையாவிட்டால்.......
- நீங்கள் பிள்ளையின் மொழி தொடர்பகக் கவலையடைந்தால்......
- பிள்ளை நீண்ட காலத்திற்கு கொன்னை அல்லது கரகரத்தல் குரலைக் கொண்டிருந்தால்.....

தகுதி வாய்ந்தவர்களிடம் ஆலோசனை பெறுங்கள்!